ஓம்

சிவகுருமயம்.

சிவாசலபதி திருவடி துணை.

திருவல்லிக்கேணியில்

சின்னசாமி ஜோசியர் இல்லத்தில் எழுந்தருளியிருக்கும்

# ஆண்டவன் திருப்புகழும்,

# பலதலங்களின் திருப்புகழும்.

இவை

ஆண்டவன் அடிமையாகும்

சப் என்சீனீர் எ. எஸ். விசுவநாதையரால்

ஆண்டவன் அருளைமுன்னிட்டு

வரகவியாக இயற்றப்பட்டு

ஸ்ரீமான் சின்னசாமி ஜோசியரால்

சிவகுருகார்ப்பணமாக

சென்னை "சச்சிதானந்தம்" பிரஸில்

பதிப்பிக்கப்பட்டன.

For free Distribution.

1918.



ஓம்

சிவகுகமயம்.

பழனியாண்டவன் திருவடிதுணை.

# விநாயகர் தோத்திரம்.

இராகம் - காம்போதி - தாளம் - ஆதி.

கயமா முகனே சரணஞ் சரணம்
கருணா கரனே சரணஞ் சரணம்
தயவே புரிவா யிறையே சரணம்
தனியே முதலே சரணஞ் சரணம்
சயமா புயனே பரனே சரணம்
சரசா சிவனார் தநயா சரணம்
மயலே யறவே வருவாய் சரணம்
மயில்வா கனர்சோ தரனே சரணம்.

## நாமாவளி.

### விநாயகர்.

சிற்பர சித்தத் தற்பரக் களிறே
அற்புதக் காட்சி அன்புட னருளே.

### வேல்.

அழகா ரயில்வே லகமே மகிழப்
பழகாய் மனமே பவமோ டிடவே.

### கோழி.

சண்முகன் கொடிமேற் * சகுனமே யென்தன்
கண்மணி யேநீ கருணை புரியே.

### வள்ளி நாயகி.

சண்முகற் கினிய தற்பரை வளியே
சண்பக மேயருள் தந்தெனைக் காவே.

---

* கோழி.

### தேவகுஞ்சரி.

குகனருள் மேவுங் குஞ்சரி யேயொளிர்
சகமருள் தாயே தஞ்சம தருளே.

### தமாபரர்.

சிவசண் முகனே சிகிவா கனனே
பவபஞ் சனனே பாக்கிய மருளே.

---

## ஆண்டவன் திருப்புகழ்.

தானதந்ததன தானதந்ததன—3—தந்ததான.

இராகம் - சாவேரி - தாளம் - ஆதி.

கானிருந்தவளி யார்முயங்கவெகு
கூனிருந்தகிழ மாய்விளங்கிஅரு
கானகம் பரவியே மகிழ்ந்தவுயர் கந்தவேளே

காடுறைந்தமயி லேறியிங்குகண
மாகவென்றனிடர் தீரவந்துதவு
காமிதந்தருகு ஞவனந்தக்ருபை கொண்டவேலா

ஈனருங்கவனி யாவொழுங்குவரு
மேதனென்கதிவி காசமுந்தியெழ
ஈசவுந்தனது பாதபங்கயப்ர சண்டவீர

ஏறுதந்துமன வானாரம்படிய
தேகமிஞ்சியது ராசையுந்தணிய
ஈரநெஞ்சுடைய நீயிவண்கடிது வந்துகாவே.

சீனிகொண்டபணி யாரமுங்கருது
பால்கலந்ததெளி தேனுடன்பரவு
தீனிதந்தருசி, நாவிடங்கனிவு கொண்டுபால

தேவவுன்குகசு நாமமந்திரம
        தோடுமுன்சரண மேறுசிந்தனையை
        தேதரும்சரச மாகுமின்பமது        தந்ததாமோ
தானுவந்துதமி யேனையன்றடிமை
        யாகவென்றருக கனேகடம்புமலி
        தாரணிந்துசொலி பூஷணம்புனையு        மின்பநாதா
சாமியென்றுனடி யேபணிந்தவெனை
        வாடலின்றியணை வாய்விளங்குசின்ன
        சாமியின்பமுறு வீடமர்ந்துவள        ரெம்பிரானே.

---

பலதலங்களில் கோவில் கொண்டிருக்கும்

## ஆண்டவன் திருப்புகழ். *

தந்தன தந்தன தானதந்தன தானதனந்தன
தானதந்தன—3—தந்ததான.

இராகம் - செஞ்சுருட்டி - தாளம் - ஆதி.

அன்றெதிர்வந்தெனை யாளநன்றருளிர்
        பாலவளங்கொடு தானதந்தன
        வென்றுநடங்கொளு மாகுகன்களி
        யாடுசிவன்கிரி ஏரகந்திரை
        அண்டர்தொழுந்திரு வாவினன்குடி
        நாகைவளம்பெறு மாயுரஞ்சிறு        மந்தியாடும்
அந்தமுறுங்கபி லாசலங்கடை
        யூரருள்வந்திடு சோலையங்கிரி

---

* இப்பாடல் பலதலங்களிலும் கோவில் கொண்டிருக்கும் ஆண்டவனை அதிகாலையில் துயில் நீங்கி எழுந்தவுடன் தோத்திரம்செய்யுமாறு அச்சிடப் பட்டது. மற்றபொழுதும் பாடலாம்.

சுந்தரமிஞ்சிய சோலையங்கிரி
கோலமிகுந்தக ரூர்குடந்தையு
மந்தணர்தங்குப வானிதஞ்சைநல்
லூர்மயிலம்பழை யாறைதங்கிய கந்தவேளே.

குன்றையருப்பதி சீர்மிகுந்தநள்
ளாறு விரிஞ்சைநெ ரூர்சிதம்பர
முந்திருநின்றிடு பாகையும்பழு
வூர்சுரகுஞ்சரி யார்மணந்தடி
கொண்டபரங்கிரி கூடலெண்கணு
மாகவிளங்குவி ராலிமென்றிடு மின்பமேவுங்

குன்று, தணிந்துத னுதிடம்புகு
வோர்வினைசென்றிட நீள்பதந்தரு
கஞ்சி அவந்திம காகனம்பெறு
காசி அவுண்குல மோடவென்றிடர்
குன்றவமர்ந்திடு சீஜயந்திமுள்
வாய்கழுகுன்றமு மேவிநின்றிடு கங்கைபாலா

சென்றுமனங்கனி வாகுமம்பர்சி
ராமலைதிண்டுகல் தாவுதுன்பம
கன்றிடுமின்கதிர் காமமுந்திரு
வாதிநெடுங்களமோடுயர்ந்தொளிர்
சிங்கைபெருங்குடி கோகர்ணஞ்சிவ
காசிஸ்தலம்கழு காசலந்தவ ஜம்புகேசம்

செஞ்சுடர்நங்கையு மேயுவந்தெழி
லாடுறுகந்தணை நாடுகுன்று * நல்
வஞ்சைசுகந்தரு வாகையும்பிர
மாபுரமும்புக லூர்வணங்கிய

---

* வள்ளிமலை.

சிந்தனைவந்தவ தேதருங்கிரி
சீசயிலம்குட வாயில்வந்துறை செங்கைவேலா

நன்றுதருந்தணி காசலம்பழ
மாமலை கொஞ்சுநெல் வாயில்கந்தசி
ருங்கமதுங்கயி லாசமுஞ்சிச
சேதுவுடன்சக மாருமம்பல
நன்றெனமங்கள மாகவின்பம
தோடுறைதந்தரு ளீயுமிந்திர மங்கைபாகா

நன்மைநிதந்தர தேவகுஞ்சரி
யார்வள்ளிநங்கைய ரோடுகுங்கும
சந்தனமண்டித சோபையுஞ்சுடர்
நீபமிலங்கிட வேலுடன்சிகி
நன்றுகனிந்தினி தாடமங்கள
மாகிமனங்களி கூடவந்தரு ளெம்பிரானே.

நாமாவளி.

கந்தா குந்தாயுதா குங்கும சோபிதா குஹ
எந்தா யுந்தாதையாய் எங்குரு மோகனு ஹர.

சிவமலைச் சீராளனுக்கு ஹரோஹர.
செந்திற் செல்வனுக்கு ,,
பரங்கிரிப் பரமனுக்கு ,,
பழமுதிர்சோலைப் பாக்கியனுக்கு ,,
திருவாவினன்குடித் தீரனுக்கு ,,
ஏரகமுறை எந்தைக்கு ,,
குன்றுதோறுமாடுங் குகனுக்கு ,,
சிக்கல் சிங்கார வேலனுக்கு ,,
எட்டுகுடி எம்பிரானுக்கு ,,

தணிகைத் தாரகனுக்கு ,,
போரூர்ப் போதகனுக்கு ,,
மயிலம் மணிவண்ணனுக்கு ,,

வள்ளீ காந்த ஸ்மரணம்—ஹர ஹர
சுப்ரமண்ய ஓம்.

சிவமலை எந்தை திருவடி வாழ்க.





சேயே சிவமே சிகிவா கனனே
தாயே யெனவே திகழும் பரனே
காயே கனியே கனியுள் ரசமே
நாயேன் கதியாம் நலமே குகனே